முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்தஇந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 25 ம் திகதி முதல்
சுபகிருது வருடம் வைகாசி மாதம் 01 ம் திகதி வரை
(08.05.2022 ஞாயிறு முதல் 15.05.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அவதார ஞானியே அரங்கா வாழ்க
ஆறுமுக சூட்சும தேசிகா வாழ்க
புவனமதில் இந்தியா தமிழகத்தின்
புகலுவேன் வருங்கால பலன்குறித்து கேட்க
2. கேட்கவே அகத்திய மகரிஷி யானும்
குறைவிலா சுபகிருது தகர்திங்கள் இருபானை திகதிமேல்
திட்டமுடன் விடைதிங்கள் ஏகதிகதி வரை நடக்கும்
தக்க நிகழ்வாக இந்தியா தமிழகம் தன்னில்
3. தன்னிலே வருங்கால பலன்குறித்த ஆசி
தடையற தொடர்ந்து உரைத்திடுவேன்
மண்ணுலகில் கலியின் ஆட்சியாக
மக்களை வதைக்கும் வரி விலை ஏற்றம்
4. ஏற்றம் கூடி வாழ்வாதார நிலை
எங்கும் தடுமாற்றம் காணும்
மாற்றம் செய்வேனென வந்தவர்கள்
மக்களை பாதுகாக்கா தவிக்கவிட்டு
5. விட்டுமே மேலும் கீழுமான சக்திகள்
விசாலமான திட்டம்பல தீட்டி
திட்டம் வழி செயல்படா முடங்கி
தேசம் வளரா தேங்கக் கூடும்
6. கூடுமே தேசக் கடன் சுமை
குறைக்க முடியா ஊழல் பரவலாகி
நாடெங்கிலும் சூட்சும சக்திகள்
நன்மைதரா துறைகள் பல முடக்கும்
7. முடக்கும் சிறு குறுந்தொழில்களை
முன்னேறவிடா மூடல் நடக்கும்
அடக்குமுறை போல மீண்டும் பேரிடர்
அச்சுறுத்தும் அனுகி மக்களை
8. மக்களை காக்கும் மீட்கும்
மகா சக்தியாக ஆளுமைகள்
ஆக்கமுடன் ஞான வழிவந்து
அறமுடன் தயவுடன் ஆளுமை கண்டால்தான்

9. கண்டால்தான் இந்தவிதச் சூழல்
கலிக்கொடுமை எனும் அழிவு
உண்டாகா மாற்றம் கண்டுமே
உடன் எங்கும் பாதுகாப்புக் கூடும்
10. கூடாத வண்ணம் எதிர்மறைநிலை
குறையாது தொடர்ந்து வந்தால்
நாடெங்கிலும் பேரழிவு பெருகி
ஞானபண்டிதன் தண்டனைக்கு உள்ளாக நேரும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 25 ம் நாள் 08.05.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் வைகாசி மாதம் 01 ம் நாள் 15.05.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

உலகை காத்து வழிநடத்தவே முருகப்பெருமானின் சக்தி வடிவமாக அவதரித்த அவதார ஞானியே ஆறுமுக அரங்க மகாதேசிகரே வாழ்க! வாழ்க!! முருகப்பெருமானின் சூட்சும வடிவமே ஞான தேசிகனே வாழ்க! வாழ்க!! இவ்வுலகினில் இந்தியா தமிழகத்தின் வருங்கால பலன்குறித்து அரங்கா தாம் அகத்திய மகரிஷி எம்மிடம் கேட்க அகத்திய மகரிஷி யானும் சுபகிருது வருடம் சித்திரை மாதம் 25 ம் நாள் 08.05.2022 ஞாயிற்றுக் கிழமை முதல் வைகாசி மாதம் 01 ம் நாள் 15.05.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

கலியுகத்தின் கொடுமையாக ஆட்சி கலியுக ஆட்சிபோல் மாறி மக்களை வதைக்கும் விதமாக வரிகள் உயரும் விலைவாசிகள் ஏற்றம் காணும். மக்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்து மக்கள் தடுமாறுவார்கள். நாட்டினில் மாற்றங்கள் செய்து மக்களை காப்பேன் என மக்களுக்கு உறுதியளித்து ஆட்சி பொறுப்பை பெற்றவர்கள் எல்லாம் மக்களை பாதுகாக்காமல் தவிக்க விடுவார்கள்.

மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய மாநில அரசுகள் பலவிதமான திட்டங்களை தீட்டினாலும் அத்திட்டங்களை முழுமையாக செயல்படுத்த முடியாமல் முடக்கம் அடைய நேருமப்பா.

செயல் திட்டங்களுக்காகவும் இன்னும்பல செயல்பாடுகளுக்காகவும் தேசம் கடன் வாங்குவதனால் நாட்டின் கடன் சுமை அதிகமாகும் தேசத்தின் கடன் சுமை குறைக்க முடியாமல் போகும். இது மட்டுமல்லாமல் நாட்டினில் ஊழல் பரவலாகிடும். நாடெங்கிலும் மறைமுகமாக பல சக்திகள் செயல்பட்டு தீமை விளைவிப்பதால் பல துறைகள் முடக்கம் அடைய நேரும். சிறு குறுந்தொழில்களும் முன்னேற முடியாமல் போய் முடக்கம் அடைய நேரும்.

இந்த கொடுமையான சூழலில் நாடு தவிக்கும், நிலையில் இயற்கையும் சதி செய்வதுபோல் நச்சுக்கிருமி தாக்குதலும் உண்டாகிடும். பலவிதமான துன்பங்களை அனுபவிக்க நேரும். நாடெங்கும் மீண்டும் முடக்கம் உண்டாக வாய்ப்புள்ளதப்பா.

ஆகவே மக்களைக் காக்கவும், மீட்கவும் வேண்டுமாயின் ஆளுமை சக்திகள் சக்திமிக்கதாக மாறிட வேண்டும். அவைகள் தர்மஞான நெறிமுறைகளை பின்பற்றி அறமும் தயவும் மிக்கதாய் ஆகி தயவுடைய ஆட்சி செய்தால்தான் இந்த விதமான இடரான சூழலில்

இருந்து மீளமுடியும், கலிக்கொடுமையாக வரவிருக்கும் அழிவு உண்டாகாமல் மாற்றம் காணும் நாடெங்கிலும் இயற்கை பாதுகாப்பு பெருகும்.

அதை விடுத்து இன்னும் மாறாமல் எதிர்மறை நிலை தொடருமேயானால் நாடெங்கிலும் பேரழிவு பெருகி மக்கள் பெருந்துன்பத்திற்கு ஆளாக நேரும் கடவுளின் கோபத்திற்கு ஆளாக நேர்ந்திடுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி

–சுபம்–

முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி!!

29.04.2022, வெள்ளிக்கிழமை

சித்தார்த்தி வருடம் சித்திரை மாதம் 13ம் நாள், வியாழக்கிழமை அமாவாசை திதி, 26.04.1979 அன்று துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிகருக்கு முருகப்பெருமான் வாசிநடத்திக் கொடுத்தார்.

துறையூர் ஓங்காரக் குடிலாசான் தவத்திரு ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு ஆசான் முருகப்பெருமான் வாசி நடத்திக் கொடுத்ததின் நோக்கமே உலக மக்களுக்கு தொண்டு செய்வதற்காகத்தான்.

துறையூர் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தை நள வருடம் புரட்டாசி மாதம் 01 ம் நாள் வியாழக்கிழமை, 17.09.1976 தேதியில் ஆசான் முருகப்பெருமான் துவக்கினார் உலக நன்மைக்காகவே முருகப்பெருமானால் தோற்றுவிக்கப்பட்டது தான் துறையூர் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கமாகும்.

இது வரையிலும் பொதுமக்கள் கொடுத்த பொருளுதவியைக் கொண்டு கோடிக் கணக்கானவர்களுக்கு ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் மூலம் அன்னதானம் செய்துள்ளோம்.

இந்த சன்மார்க்க சங்கம் சாதி, இன, மத பேதம் இல்லாமல் உலக மக்களை சகோதரர்களாக எண்ணி தொண்டு செய்து வருகின்றது.

1. போற்றுவோம் முருகப்பெருமான் திருவடியை
   பெறுவோம் பேரின்ப வாழ்வை.
2. அம்மை வேலவன் அருளினை போற்றிட
   நம்மையும் காத்து நாட்டையும் ஆள்வான்.

–முருகனடிமை ஓங்காரக்குடிலாசான்.